# பொதுக்காலம் 19 ஆம் வாரம்

## திருவழிபாடு ஆண்டு B

**இன்றைய வாசகங்கள்:**

**அரசர்கள் முதல் நூலிலிருந்து வாசகம் 19: 4-8,**

**திபா 34: 1-2. 3-4. 5-6. 7-8,**

**திருத்தூதர் பவுல் எபேசியருக்கு எழுதிய**

**திருமுகத்திலிருந்து வாசகம் 4: 30 - 5: 2,**

**யோவான் எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 6: 41-51**

## திருப்பலி முன்னுரை:

**நிலைவாழ்வுக்குரியவர்களே,**

பொதுக்காலத்தின் பத்தொன்பதாம் ஞாயிறு திருப்பலியை சிறப்பிக்க உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம். இன்றைய திருவழிபாடு இயேசுவில் நம்பிக்கை கொண்டு நிலைவாழ்வைப் பெற்றுக்கொள்ள நமக்கு அழைப்பு விடுக்கிறது. “விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த உணவு நானே“ என்று இயேசு கூறியதால் யூதர்கள் அவருக்கு எதிராக முணுமுணுத்தார்கள். அவர்களுக்கு பதிலளிக்கும் இயேசு, தன்னில் நம்பிக்கை கொள்வோருக்கு நிலைவாழ்வை வாக்களிக்கிறார். உலகு வாழ்வதற்காக இயேசு தன்னையே கையளிக்கிறார். இயேசு விண்ணகத் தந்தையிடம் இருந்து வந்தவர் என்ற நம்பிக்கையால் நிலைவாழ்வைப் பெற்றுக்கொள்ளும் வரம் வேண்டி, இந்த திருப்பலியில் பங்கேற்போம்.

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**1. நிலைவாழ்வு தருபவராம் இறைவா,**

விண்ணக உணவாகிய கிறிஸ்துவால் வலிமை பெற்று, உமது மந்தையை அருள் வாழ்வில் வழிநடத்தும் ஆற்றலை எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவருக்கும் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**2. பரிவுள்ளவராம் இறைவா,**

உலகிற்கு வாழ்வளிக்கும் உணவாக நீர் அனுப்பிய உமது திருமகன் இயேசுவை உலக மக்கள் அனைவரும் சுவைத்து மகிழுமாறு, திறந்த மனதோடு உண்மையத் தேடும் எண்ணத்தை மானிடர் அனைவருக்கும் அளிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**3. நம்பிக்கை அளிப்பவராம் இறைவா,**

உலகெங்கும் அரசியல், சமூக, சமய சூழ்நிலைகளில் சிக்குண்டு, உம்மைப் பற்றிய உண்மைகளை அறிந்துணர முடியாத வகையில் வாழும் மக்கள் அனைவருக்கும், உம்மில் நம்பிக்கை கொள்ளும் சூழ்நிலையை அமைத்து கொடுக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**4. வாழ்வின் ஊற்றாம் இறைவா,**

எங்களுக்காக விண்ணகத்தில் இருந்து இறங்கி வந்த உணவாகிய இயேசுவில் முழுமையான நம்பிக்கை கொண்டு, நிலைவாழ்வின் பேறுபலன்களைப் பெற்று மகிழும் வரத்தினை எம் பங்குத்தந்தை, அருட்சகோதரிகள், பங்கு மக்கள் அனைவருக்கும் தர வேண்டு மென்று உம்மை மன்றாடுகிறோம்.

**5. உயிரைச் சாவினின்று காக்கின்ற தந்தையே இறைவா!**

யாரும் நினையாத ஆன்மாக்களுக்கும், மரணத்தறுவாயிலுள்ள துன்புறும் அன்பர்கள் அனைவரும் இறைமகன் இயேசுவின் நிலையான அமைதியையும், பேரின்பவீட்டின் இன்பத்தையும் முழுமையாகப் பெற்றிட அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**6. எங்கள் அன்பு தந்தையே இறைவா!**

உமது பிள்ளைகள் இளையோராகிய நாங்கள் ”எமது தேவைகளில் முதன்மையான தேவை நீரே” என்று உணர்ந்து நாங்கள் முழுமையாக உம் கரம் பற்றிக் கொள்ளவும், நிலைவாழ்வுப் பெற்று உம்மை அடையவும் இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.